நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.219/2020

**2021ம் ஆண்டு டிசம்பர்** திங்கள் 16ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | சேகர் | வயது: | 52 |
| த/பெ.(அ)க.பெ | பொன்னுசாமி | தொழில்: | கூலி வேலை |
| ஊர் : | சின்னகுனிச்சி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் சின்னகுனிச்சியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். இறந்துபோன வீரராகவன் எனது உறவினர். கடந்த 2019ம் வருடம் எனது உறவினர் வீரராகவன் கவுண்டப்பனூருக்கு செல்வதற்காக தனது இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கவுண்டப்பனூரில் வைத்து சாலை விபத்தில் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு மருத்துவமனை சென்றேன். சிகிச்சை பலனின்றி அவர் சேலம் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். அவர் உடல் மீது நடந்த பிரேத விசாரணையின்போது நான் உடனிருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எ.த.கு.வி.:

விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தனர். காவல் நிலையத்திற்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் கையொப்பம் வழக்கமாக பெறுவார்கள் என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.219/2020

**2021ம் ஆண்டு டிசம்பர்** திங்கள் 16ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | சசிகலா | வயது: | 35 |
| த/பெ.(அ)க.பெ | வீரராகவன் | தொழில்: | பீடி வேலை |
| ஊர் : | சின்னகுனிச்சி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் சின்னகுனிச்சியில் குடியிருந்து பீடிவேலை செய்து வருகிறேன். என் கணவர் சாலை விபத்தில் இறந்துவிட்டார். கடந்த 2019ம் வருடம் காலையில் வேலைக்கு செல்வதற்காக தன்னுடைய இருசக்கர வாகனத்தில் காலை 10.00 மணிக்கு கவுண்டப்பனூருக்கு செல்லும்போது ஏரிக்கு பக்கத்தில் எதிர் திசையில் வந்த இருசக்கர வாகனமானது வேகமாக வந்து என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின்மீது மோதியதில், அவருக்கு கால் மற்றும் தலையில் அடிப்பட்டது. பின்னர் காயம்பட்ட அவரை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கும், பின்னர் மேல் சிகிச்சைக்காக தருமபுரி மற்றும் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி எனது கணவர் இறந்துவிட்டார். பின்னர் சேலம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின்போது காவல் ஆய்வாளர் விசாரணையின்போது நான் உடனிருந்தேன். என்னை போலிசார் விசாரித்தனர்.

எ.த.கு.வி.:

போலீசார் விபத்து நடந்த மறுநாள் என் வீட்டிடம் என்னை விசாரித்தனர். விசாரித்ததற்காக ஏதாவது கையொப்பம் செய்தேனா என்று நினைவில்லை. எனது கணவருக்கு எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நஷ்டஈடு கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

ம.வி.இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி.219/2020

**2021ம் ஆண்டு டிசம்பர்** திங்கள் 16ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | தங்கராஜ் | வயது: | 47 |
| த/பெ.(அ)க.பெ | தங்கவேல் | தொழில்: | விவசாயம் |
| ஊர் : | சின்னகுனிச்சி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் சின்னகுனிச்சியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தனது தம்பி பெயர் வீரராகவன்.என் தம்பி சாலை விபத்தில் இறந்து விட்டார். கடந்த 1 1/2 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாள் காலை 8.00 மணிக்கு கவுண்டப்பனூரில் வைத்து விபத்து ஏற்பட்டது எனது தம்பி வேலைக்கு செல்வதற்காக காலையில் கிளம்பி சென்றார். எனது மகன் ராஜதுரை விபத்தில் எனது தம்பி அடிப்பட்டு இருந்ததை பார்த்து எனக்கு தகவல் அளித்தார். மேற்கண்ட சாலை விபத்தானது ஹீரோஹோண்டா என்ற வாகனம் மோதி எனது தம்பிக்கு விபத்து ஏற்பட்டதாக எனது மகன் தெரிவித்தார். பின்னர் சம்பவயிடம் சென்ற நான் எனது தம்பியை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக எனது தம்பியை தருமபுரி அரசு மருத்துவமனையிலும், பின்னர் சேலம் மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேர்த்தோம். சிகிச்சை பலனின்றி எனது தம்பி வீரராகவன் 23.09.2019ம் தேதி 12.40 மணிக்கு இறந்துவிட்டார். பின்னர் எனது தம்பியின் உடல்மீது சேலம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேதவிசாரணையின்போது நான் உடனிருந்தேன். என் தம்பி விபத்து குறித்து நான் கந்திலி காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி.:

புகாரை நான் எழுதவில்லை. கையொப்பம் மட்டும் செய்தேன். விபத்து நடந்த மறுநாள் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் எழுதியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் விசாரணைக்காக என்னுடன் பட்டியல் சாட்சி 2 முதல் 8 வரையிலானவர்களை அழைத்து

சென்றேன். காவல்துறையினர் விசாரித்து கையொப்பம் பெற்றுக்கொண்டனர் என்றால் சரிதான். நான் அழைத்து சென்ற சாட்சிகளிடம் போலீசார் கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.